# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 170/2021 நாள்.18.04.2026

DW2- திரு. அருண்பிரசாத், த/பெ. திரு. கரிகாலன்

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

9.4.2014இல் எனக்கு நடந்த நேர்முக தேர்வு குறித்து ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். அந்த நேர்முக தேர்வை நடத்தியது ஒரு குழு என்று சொல்லியுள்ளேன் ஆனால் அந்த குழுவில் இருந்தவர்கள் யார் யார் என்று சொல்லவில்லை என்றால் ஆமாம். 25.4.2014 தேதியில் தேர்வு குழு எனக்கு ஒரு பரிந்துரை கொடுத்தாக சொல்கிறேனே அதுகுறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். என்னுடைய சம்பளசான்று குறித்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல ஒன்று தாக்கல் செய்துள்ளேன். அரசு சம்மந்தபட்ட நிறுவனத்தில் வேலை கொடுக்க வேண்டுமானால் அரசாங்கம்தான் கொடுக்கவேண்டும் என்றால் காலேஜ் என்பதால் அங்கிருந்து வந்தது. அவ்வாறு ஒப்புகொள்ளகூடிய ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அங்குபோய் வேலைக்கு சேர்ந்து அது ஒப்புகொள்ளபட்ட பின்னர்தான் சம்பளம் வரும் என்றால் ஆமாம். வேலை சேர்ந்ததிலிருந்து ஒரு வருடம் முடிந்துதான் வேலை நிரந்தரம் ஆகும் என்றால் ஆமாம். 2.4.2014 லிருந்து 2.5.2015 வரையிலான காலத்திற்கான உத்தரவு பணி நிரந்தர உத்தரவு இல்லை என்றால் சரியல்ல. பாரதியார் பல்கலைகழகத்துடன் ஒப்பந்தம் போட்டுள்ளேனா என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் வேலைக்கான உத்தரவை பாரதியார் பல்கலைகழக அலுவலர் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த உத்தரவில் ரவிக்குமார் என்பவர் கையெழுத்து செய்துள்ளார் என்பதை நிரூபிக்க ஆதாரம் உள்ளதா என்றால் சரியல்ல. பாரதியார் பல்கலைகழகத்திலிருந்து எனக்கு சம்பளம் வந்தது என்பதை காண்பிக்க கணக்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். வாதி கோரிய பரிகாரத்தை காலதாழ்த்துவதற்காக பாரதியார் பல்கலைகழகம் என்றும் ரவிக்குமார் என்றும் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதி பணம் பெற்றுகொண்டுதான் வாதிக்கு கடன் பத்திரம் எழுதிகொடுத்தார்

என்றும் ஆகவே கடனை திரும்ப செலுத்த கடமைபட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.04.18 16:50:19 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**